தலைப்பு - 286 - காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

தலைப்பு 286 – காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.
2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது என்பது,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	08 உள்ளக மாகாண அலுவலகங்களின் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான நிலுவை காணி குத்தகை வருமானம் ரூபா 386.73 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் அவற்றுள் 03 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை குத்தகை வாடகை ரூபா 237.08 மில்லியன் அல்லது 61 சதவீதமாக காணப்பட்டது. அவ்வாறே மீளாய்வாண்டளவில் நிலுவை குத்தகை பெறுமதியில் ஆண்டினுல் அறவிடப்பட்டிருந்த பெறுமதி ரூபா 14.88 மில்லியன்கள் அல்லது 3.8 சதவீதம் எனும் மிகவும் குறைந்த மட்டத்தில் நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது.	மதிப்பிடப்படாத நிலுவை குத்தகைக்கு உட்பட்ட காரணத்தால் வரி அறவீடு சதவீதமானது குறைவடைந்துள்ளது.	உள்ளக நடைமுறையொன்றினை தயாரித்து நிலுவை குத்தகை அறவிடப்பட வேண்டும்.
(ஆ)	2024 திசெம்பர் 31 ஆம் ஆம் திகதியில் உள்ளபடியான நிலுவை காணி குத்தகை வாடகை வருமானத்தில் பொலன்னறுவை மற்றும் அம்பாறை அலுவலகங்களுக்கு மாத்திரம் முறையே ரூபா 113.59 மில்லியன் மற்றும் ரூபா 193.56 மில்லியன் எனும்மாறு ரூபா 307.15 மில்லியன் அல்லது 79 சதவீதமாக காணப்பட்டது. தெரிவுக் கணக்காய்வின் பிரகாரம் பொலனறுவையில் குத்தகைக்கு வழங்கும் போது காணிகளின் குத்தகையாளர்களின் எண்ணிக்கை 445 ஆக காணப்பட்டதுடன் அவற்றுள் ரூபா 0.4 மில்லியனை விட அதிகமான நிலுவை குத்தகைதாரர்கள் 77 பேர் காணப்பட்டமையால் இந்த குத்தகையாளர்கள் தொடர்பில் நிலுவை குத்தகையினை அறவீடு	நிலுவை குத்தகை அறவீடு செய்யும் நடைமுறையை துரிதப்படுத்துவதற்கு உரிய அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்கள் மாகாண / உள்ளக மாகாண காணிகள் ஆணையாளரின் தொடர்ச்சியான அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டதுடன் கணக்காய்வு அறிக்கையின் மூலமும் சுட்டிக்காட்டப்பட்டிருந்த காரணத்தால் அதனை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என அவர்களுக்கு	உள்ளக நடைமுறைகளை தயாரித்து நிலுவை குத்தகை வருமானத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அறிவுறுத்தப்பட்டது. அவ்வாறே குத்தகை செலுத்துவதை புறக்கணிப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு உரிய பணிகளை மேற்கொள்ளுமாறும் வழக்கு தொடர்வதற்கு ஆவணங்களை சமர்ப்பிக்குமாறும் தொடர்ச்சியாக அறிவுறுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது.	
(இ)	குத்தகையாளர்களை உரிய திகதியில் குத்தகை செலுத்தாமை, குத்தகை செயற்படும் சட்டரீதியான திகதி உரித்தினை கையளித்த பின்னர் இடம் பெற்றமை, குத்தகை உடன்படிக்கை ஏற்படுத்தல் மற்றும் அதற்காக பல வருடங்கள் கடந்துள்ளமை போன்ற விடயங்களின் அடிப்படையில் நிலுவை குத்தகை பெறுமதி ரூபா 386.73 மில்லியன் வரை அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்திருந்த போதிலும் குத்தகையை புறக்கணிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் மிகவும் மந்த கதியில் காணப்பட்டது. திணைக்களத்தின் மூலம் 2020.05.20 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2020/06 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் நிலுவை குத்தகை அறவீடு செய்வதனை மேம்படுத்தும் நோக்கில் தண்டப் பணத்திற்கு நிவாரணம் வழங்குவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ள போதிலும் குத்தகையினை திருத்தியமைத்த பின்னர் குத்தகை வருமானம் அதிகரித்த விதம் தொடர்பில் ஆன விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	அனைத்து உள்ளக மாகாண காணிகள் ஆணையாளர்கள் 2024.05.31 மற்றும் 2024.10.25 ஆகிய திகதிகளில் தலைமை அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்டு மற்றும் Zoom Meeting மூலம் நிலுவை குத்தகையை அறவீடு செய்தலை முறைமைப்படுத்துதல் தொடர்பில் அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் குத்தகை செலுத்துவதை புறக்கணிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் தொடர்பில் அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	உள்ளக நடைமுறையொன்றினை தயாரித்து நிலுவை குத்தகை வருமானத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	உத்தியோகபூர்வ இல்லங்களை பராமரித்து செல்லல் மற்றும் அவற்றின் வாடகை கட்டங்களை அறவீடு செய்தல் தொடர்பிலான ஆவணங்கள் உரிய முறையில் பேணப்பட்டிருக்கவில்லை. 2021 ஜனவரி 01 ஆம் திகதி உத்தியோகபூர்வ இல்லங்களை பொறுப்பேற்ற காணிகள் ஆணையாளர் (முன்னாள்) 2022 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 188,700 ஆன வாடகை கட்டணத்தை செலுத்தியிருக்கவில்லை.	உத்தியோகபூர்வ இல்லத்தில் வதியும் - உரியதாக உத்தியோகபூர்வ இல்லத்தின் வாடகையாக 188,700 ஆன தொகையை செலுத்துமாறு உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தப்பட்டது. அதில் ரூபா 25,000 ஆன தொகை இது வரையிலும் செலுத்தப்பட்டுள்ளது.	உத்தியோகபூர்வ இல்லத்தின் தகவல்களை நாளது வரையாக்கி நிலுவை வாடகை அறவீடு செய்யப்பட வேண்டும்.
(உ)	பல வருடங்களாக நில மீட்டுதல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்டு வெளிவாரி தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகள் 321 ஏக்கர் 3.03 பேச்சஸ் பரப்பளவிற்கு உரிய காணி அபிவிருத்திக்கு முன்னர் முன்னேற்றப்படாத பெறுமதியான ரூபா 59.78 மில்லியன் தொகை	குறித்த பெறுமதியை செலவு வைப்பதற்கு உரிய வரமான தலைப்பு தொடர்பில் விசாரணை தொடர்பில் அந்த கூட்டுத்தாபனத்தினால் விசாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த	காணி அபிவிருத்தி செய்வதற்கு முன்னர் நிலவிய அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியை காணியை சுவீகரிப்பதற்கு முன்னர் அறவீடு செய்ய

திணைக்களத்திற்கு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பணத்தை கணக்கு வைக்க வேண்டும். வேண்டிய வருமான தலைப்பு நில மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனத்திற்கு இதுவரையிலும் அறிவிக்கப்பட்டுள்ளது அதற்கமைய அந்தப் பணம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

3.2 செலவின முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடுகள் இயலுமான அளவில் முழுமையாகவும் துல்லியதானமாகவும் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான 14 மீண்டுடெழும் செலவின விடயங்களுக்கான ரூபா 75.4 மில்லியன் நிதியேற்பாட்டில் ரூபா 31.4 மில்லியன் நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. அந்த சேமிப்பானது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டின் 25 சதவீதத்திற்கும் 82 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் நிலவியது. அவ்வாறே 03 மூலதன விடயங்களுக்குரிய மொத்த தேறிய நிதியேற்பாடான ரூபா 56 மில்லியனில் சேமிப்பானது ரூபா 36.5 மில்லியனாக காணப்பட்டது. சேமிப்பு 20 சதவீதம் முதல் 78 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் நிலவியது	உருமய தேசிய நிகழ்ச்சித்திட்டம் 2024 ஆம் ஆண்டில் துரித நிகழ்ச்சித்திட்டம் ஒன்றாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஆதற்கமைய அந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக கிடைத்த நிதியேற்பாட்டில் பொருள், எழுது கருவிகள் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல் உள்ளடங்கலான செலவினங்கள் நிருவகிக்கப்பட்டுள்ளது.	சரியான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும்.

3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

அவதானிப்புகள்			பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	**பெறுமதி ரூபா மில்லி.**	**இணங்காமை**		
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 135 ஆம் பிரிவு, திறைசேரி செயலாளரின் 2022 நவம்பர் 25 ஆந்	2.37	2024 ஆம் ஆண்டிற்கான அரச செலவினங்களை கட்டுப்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள், சுற்றறிக்கைகள்	அரசின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட	அரச செலவினங்களை நிருவகிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள், சுற்றறிக்கைகளின் பிரகாரம்

திகதிய 08/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை மற்றும் 2024 ஜனவரி 10 ஆம் திகதிய 01/2024 இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை		மற்றும் சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்கள் தொடர்பில் கருத்திற் கொள்ளாது உத்தியோகத்தர்களுக்கு உணவு குடிபானம் மற்றும் தங்குமிட வசதிகள் போன்றே அரசியல் கூட்டங்களுக்கு எரிபொருள் மற்றும் அரச வாகனங்களை பெற்றுக்கொள்ளல் ஆகிய விடயங்களுக்கு சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள செலவினம் ரூபா 2.37 மில்லியன் ஆக காணப்பட்டது.	முன்மொழிவொன்றான நடைமுறைப்படுத்தப்பட்ட உருமய நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது அதன் பொறுப்பானது திணைக்களத்திற்கு சாட்டப்பட்டிருந்தது. அதனால் இரவு நேரங்களில் சேவையாற்றுவதற்கு நேரிட்டமையால் அந்த பணிகளில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு தேவையான உணவு குடிபானங்கள் மற்றும் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டன. அவ்வாறே வழங்கல் பத்திரங்களை உரிய நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில் கடமையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தருக்குரிய தங்குமிட வசதிகளை வழங்குவதற்கு நேர்ந்துள்ளமையை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.	நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 தூரநோக்கு மற்றும் பணிப்பொறுப்பு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
தேசிய கொள்கை ஒன்றினுள் சிறந்த தொடர்புபடுத்தலுடன் அபிவிருத்தியின் செழிப்பான தன்மை தொடர்பில் உறுதிப்படுத்தும் வகையில் அரச காணிகளை உச்ச மட்டத்தில்	திணைக்களத்தின் ‘பணிப்பொறுப்பு’ இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிகள் தொடர்பான தரவுகள் மற்றும்	காணிகள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில்

உறுதிப்படுத்துவதற்கு வழிகாட்டுவதன் மூலம் நிர்மலமான காணி ஒன்றின் உரித்தினை உறுதிப்படுத்துவதற்காக தொடர்பில் பொருத்தமான முகாமைத்துவம் ஒன்றினை பேணிச்செல்லல் திணைக்களத்தின் 'பணிப்பொறுப்பு' ஆக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் தகவல் மற்றும் தரவுகளை பெற்றுக்கொள்ளும் போது திணைக்களத்தினுள் குத்தகைக்கு வழங்குதல், காணிகளை விற்பனை செய்தல், வழங்கல் பத்திரம் வழங்குதல், குத்தகை நிவாரணம் போன்ற தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு முறையான நடைமுறை கணக்காய்வுத் திகதியான 2025 ஏப்ரல் 30 ஆந் திகதிவரை பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை.	தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு திணைக்களத்தினுள் குத்தகைக்கு வழங்குதல், காணிகளை விற்பனை செய்தல், வழங்கல் பத்திரம் வழங்குதல், குத்தகை நிவாரணங்கள் போன்ற தகவல்களை உரிய முறையில் வழங்குவதற்கு முறையான நடைமுறையொன்றாக E-Slim கட்டமைப்பு தற்போது செயற்படுகின்றது. கணக்காய்வு அவதானிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களை கருத்தில் கொண்டு E-Slim கட்டமைப்பில் தற்போது நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது.	முறையான நடைமுறைகள் தயாரிக்கப்பட வேண்டும்.

4.2 திட்டமிடல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆம் ஆண்டின் போது இலக்கிடப்பட்ட தரவு செயலாற்றல் அறிக்கையின் தகவல்களின் பிரகாரம் E-Slims கட்டமைப்பு மூலம் மீளாய்வாண்டின் போது 2000 அனுமதிப்பத்திரங்கள், 40,000 வழங்கல் பத்திரங்கள் வழங்குவதற்கும் நீண்ட கால குத்தகை 1,000 கட்டமைப்பில் உள்ளடக்குவதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் 917 அனுமதிப்பத்திரங்கள், 22,432 வழங்கப் பத்திரங்கள் வெளியிடப்பட்டிருந்ததுடன் 152 குத்தகைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. அதற்கமைய அதன் செயன் முன்னேற்றம் முறையே 46 சதவீதம் மற்றும் 56 சதவீதம் மற்றும் 15 சதவீதமாக காணப்பட்டது.	நிலவும் அரசின் கொள்கை ரீதியான தீர்மானமாக விடுதலை வழங்கல் பத்திரங்களை வழங்கும் போது (உருமய) முன்னுரிமை நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தியிருந்த காரணத்தால் உத்தேச நோக்கங்களை அடைந்துகொள்ள முடியாதிருந்தது.	செயலாற்றல் அறிக்கைகளை தயாரிக்கும் போது பிரயோரீதியில் அடையக்கூடிய இலக்குகளுக்கு திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	காணிகள் ஆணையாளர் நாயகத்தினால் அனைத்து பிரதேச செயலாளர்கள் மற்றும் உள்ளக மாகாண காணி ஆணையாளர்களுக்கு 2023 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து குத்தகை அங்கீகாரங்கள் மற்றும் அனைத்து குத்தகை	நீண்ட கால குத்தகை காணிகள் தொடர்பில் E-Slims கட்டமைப்பில் தொடர்பில் உள்ளடக்கப்பட்டுள்ள	E-Slims கட்டமைப்பின் செயற்பாடு செயற்படு நிலையை மேம்படுத்த வேண்டும்.

	தொடர்பான தகவல்களும் E-Slims கட்டமைப்பிற்கு உள்ளடக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகள் எவ்வளவு எனும் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் E-Slims கட்டமைப்பின் மூலம் கிடைத்த தகவல்களின் பிரகாரம் நீண்டகால குத்தகையின் காணிகளின் எண்ணிக்கை 7,517 எனும் தகவல் கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கையின் திகதி வரையிலும் அரசின் காணிகளை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் ஈற்றப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை குத்தகை வருமுானம் தொடர்பான அறிக்கைகள் கட்டமைப்பில் இருந்து பெற்றுக் கொள்ளமுடியாதிருந்தது.	தகவல்களுக்கு உரியதாக ஈட்டப்பட்ட வருமானங்கள் மற்றும் நிலுவை குத்தகை வருமானங்கள் தற்போது கட்டமைப்பில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு இயலுமை காணப்பட்ட போதும் பிரதேச செயலகங்கள் இந்த கட்டமைப்பின் தரவு உள்ளீடு செய்வதற்கு 100 சதவீதம் இது வரையிலும் இசைவாக்கம் அடைந்திராத காரணத்தால் எதிர் காலத்தில் இந்த நிலைமையை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	
(இ)	கடந்த வருடத்தில் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் குத்தகை கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக ஏனைய பணிகளின் பணிகளை இணைய வழிமுறை மூலம் மேற்கொள்வதற்கு 10 வங்கிக் கணக்குகளின் மூலம் அனைத்து பிரதேச செயலகங்களையும் தொடர்பு கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட E-Slims கட்டமைப்பு தற்போது 11 வருடங்கள் கடந்துள்ள போதிலும் உரிய முறையில் குத்தகை பரிந்துரைக்கப்பட்டிராத போது குத்தகை அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளல் மற்றும் குத்தகை கொடுப்பனவுகள் இணைய வழி மூலம் மேற்கொள்வதற்கு 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முடியாதிருந்தது.	இதுவரையிலும் இணைவழி முறையின் ஊடாக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு உரிய பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன். திணைக்களம் சமர்ப்பித்துள்ள அமைப்பு குறிப்பீடுகளுக்கு விலை கேள்வி கோருவதற்கு இரு அரச வங்கிகள் பதிலளித்திராத காரணத்தினால் இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற அனைத்து வங்கிகளிடமிருந்தும் விலைக்கு ஏற்ப கேள்வி கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	குத்தகை கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக ஏனைய பணிகளை இணைய வழி முறை ஊடாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.3 எதிர்பார்த்த அடைவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
அரச காணிகள் முகாமைத்துவ தகவல் கட்டமைப்பு (E-Slims) 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 05 வருட கால திகதியினுள் ரூபா 119.6 மில்லியன் ஆன மதிப்பீட்டின் அடிப்படையில் கட்டமைப்பின் தொடர்பில் அனைத்து பணிகளையும் நிறைவு செய்து திட்டமிடப்பட்டிருந்தது. இவ்வாறா போதிலும் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 01 அத்தியாயத்தின் 1.1 மற்றும் 1.2.1 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு	2003 இன் 27 ஆம் இலக்க தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அதிகாரச் சட்டம் மற்றும் அதில் திருத்தப்பட்ட 2008 இன் 33 ஆம் இலக்க சட்டத்தினால் தனியார் மற்றும் ஆகிய இரு பிரிவுகளுக்கும் மூலோபாய மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் e-அரச எண்ணக்கருவின் ஊடக செயற்படுத்துவதற்கும்	தேவையினை பெற்றுக்கொள்வதற்கு நிறுவனங்களுடன் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு தேவைக்குப் பொருந்தும் வகையில் கட்டமைப்பினை துரிதமாக நாளது

பெறுகைகள் நடைமுறை மேற்கொள்ளப்படாத காரணத்தினால் இந்த கட்டமைப்பினை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு பொருத்தமான நிறுவனம் ஒன்றினை தெரிவு செய்வதற்கு முடியாதிருந்தது. 2013 ஆம் ஆண்டு முதல் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் ரூபா 226.89 மில்லியன் இந்தப் பணிக்காக அரச நிதி செலவிடப்பட்டுள்ள போதிலும் அரச காணிகளின் முகாமை மற்றும் குத்தகை பணத்தினை அறவீடு செய்தல் ஆகியவற்றை எளிமையாக்கும் வகையில் இந்தக் கட்டமைப்பினை வெற்றிகரமாக மேற்கொண்டிருக்கவில்லை.	அதனுடன் தொடர்புடைய உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப முகவர் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த அதிகாரங்களின் பிரகாரம் தேசிய கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் மூலம் கிடைத்த அங்கீகாரத்தின் அடிப்படையில் கிடைத்த 2008 ஆம் ஆண்டின் போது முன்னர் நிலவிய காணி அபிவிருத்தி அமைச்சிலும் , காணிகள் ஆணையாளர் நாயகம் திணைக்களம் மற்றும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் (ICTA) ஒருங்கிணைந்து புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றினை கைச்சாத்திட்டு அரச காணிகள் தகவல் முகாமைத்துவ கட்டமைப்பு ஒன்று (e-Slims) காணிகள் ஆணையாளர் திணைக்களத்தினால் நடாத்திச் செல்லப்படுவதாக தெரிவித்துக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் உரிய செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பணிகளை நிறைவேற்ற கவனம் செலுத்தப்பட்டுள்ளது.	வரையாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	காணிகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமான இரத்மலான பிரதேசத்தில் அமைந்துள்ள கட்டிடமொன்றிகை கேட்போர்கூடமாக மாற்றுவதற்காக ரூபா 4.59 மில்லியன் செலவிடப்பட்டு பழுதுபார்க்கப்பட்டிருந்தது. மேலும், அந்த கட்டிடத்திற்கு ரூபா 12.99 மில்லியன் பெறுமதியான பொருட்பதிவேட்டு பொருட்களும் வழங்கப்பட்டிருந்தன. அதற்கு மேலதிகமாக 04 பாரிய அளவிலான வளிச்சீராக்கி இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்தன. மேலும், அந்த கட்டிடத்தின் ஒரு பகுதியை கணினி	கேட்போர் கூடத்தினை சிறந்த மட்டத்தில் அரச மற்றுமொரு அரச நிறுவனத்திற்கு அவர்களின் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு வழங்குவதற்கு மற்றும் அமைச்சிடமிருந்து கிடைத்த அங்கீகாரத்தின் அடிப்படையில் அனைத்து அமைச்சினதும் செயலாளர்கள் மற்றும் திணைக்கள தலைவர்களையும் அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கொழும்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிரதேச செயலகங்களின்	கட்டிடம் மற்றும் அதில் காணப்படும் உபகரணங்களை முழுமையாக பயன்படுத்தக்கூடிய விதத்தில் நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

	நிலையமொன்றாக பயன்படுத்துவதற்கு ரூபா 5.58 மில்லியன் செலவிடப்பட்டு கணினி மற்றும் உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும், இந்த கேட்போர்கூடம் மற்றும் கணினி நிலையம் ஆகியவை குறைப்பயன்பாட்டுடன் நிலவின.	உத்தியோகத்தர்களுக்கு E-Slims பயிற்சி பணிகளை நடாத்துவதற்கு அந்த கட்டமைப்பிற்கு குத்தகை கோவை தகவல்களை சுற்றிலும் உள்ள பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள் மூ உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் போது இந்த கணினி ஆய்வுகூடம் “உருமய” நிகழ்ச்சித்திட்டத்தின் தரவு உள்ளீட்டல் பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டதுடன் 2021/2022 ஆண்டுகளிலும் E-Slims பயிற்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.	
(ஆ)	திணைக்களத்திற்குச் சொந்தமான 411 உத்தியோகபூர்வ இல்லங்களின் 2024 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்டுள்ள வீட்டு வாடகை தொடர்பான விபரங்களை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. சட்டரீதியான நடைமுறையொன்றின் அடிப்படையில் உத்தியோகபூர்வ இல்லங்களின் வாடகை அடிப்படையில் வழங்காமை, உத்தியோகபூர்வ இல்லங்களில் மற்றும் அந்த நிலத்தில் அத்துமீறி குடியிருப்பவர்களை அகற்றாமை, கட்டிட பழுதுபார்த்தல்களை மேற்கொள்ளாமை, கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகளை அளத்தல், வரைபடங்களை தயாரித்தல், உரித்தை சுவீகரித்தல், அவற்றின் எல்லைகளை உருவாக்குதல் மற்றும் காணிகளை பாதுகாத்தல் போன்ற விடயங்களை உரிய முறையில் மேற்கொள்ளாமை மற்றும் வாடகை கட்டணங்கள் அறவிடுதல் தொடர்பில் உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன், உத்தியோகபூர்வ இல்லங்களில் 261 மதிப்பிடப்பட்டுள்ளதுடன் 98 இல்லங்களிற்கு உரிய தேறிய மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அந்த 30 உத்தியோகபூர்வ இல்லங்களில் அத்துமீறி குடியிருப்பதுடன் 35 உத்தியோகபூர்வ இல்லங்களை அரச நிறுவனங்களுக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளதுடன், அவற்றுள் 07 இல்லங்கள் சுவீகரிக்கப்பட்டிருந்தன.	உத்தியோகபூர்வ இல்லங்களின் வாடகை அறவீடு தொடர்பில் மாதாந்த அறிக்கையை உரிய முறையில் அனுப்புமாறு உரிய அலுவலகங்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துமீறி குடியிருப்பவர்கள் வதியும் உத்தியோகபூர்வ இல்லங்கள் எவை என்பது மற்றும் அந்த அத்துமீறிய குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பது தொடர்பில், பழுதுபார்க்கப்பட வேண்டிய உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் கட்டிடங்களை பழுதுபார்ப்பதற்கு உரிய முன்னுரிமை பதிவேடொன்றை தயாரிப்பதற்கு மற்றும் காணிகள் மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களை மிகவும் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு இயலுமையுள்ள அரச நிறுவனங்களுக்கு வழங்குதல் தொடர்பான தகவல்கள் 2025.03.17 ஆந் திகதிக்கு முன்னர் குறிப்பிடுமாறு எனது LCGD/AD/8/உத்தியோகபூர்வ இல்லங்கள், காணிகள் மற்றும் கட்டிடங்கள்/2025 மற்றும் 2025.03.11 ஆம் திகதிய கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. உள்ளக மாகாண அலுவலகங்கள் மூலம் அனுப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் அத்து மீறிய குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை 20 ஆகும். அது தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.	உத்தியோகபூர்வ இல்ல வாடகையை அறவிடுதலை போன்றே அவற்றை மதிப்பீடு செய்து கணக்கில் கணக்கு வைத்தல் மற்றும் அத்துமீறி குடியிருப்பவர்களை அகற்றுவதற்கு உள்ளக நிர்வாக நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும்.

		உத்தியோகபூர்வ இல்லங்கள் காணிகள் மற்றும் கட்டிடங்கள் 117 இற்காக வரையிலும் மொத்த மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் 33 இற்காக தொடர்ந்தும் மதிப்பீட்டு அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.	
(இ)	காணி ஆணையாளர் நாயகத்தின் பயன்பாட்டிற்காக 2021 ஜனவரி 21 ஆந் திகதி ரூபா 25.07 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லத்தின் நிர்மாணிக்கப்பட்ட திகதி முதல் அதில் குடியேறியிருக்காததுடன் பராமரிப்பு நடவடிக்கைககளும் இடம் பெற்றிருக்கவில்லை. மேலும் பராமரிப்பு நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொள்ளாத காரணத்தால் நாளுக்கு நாள் இந்த கட்டிடம் சிதைவடைந்த நிலைமையில் காணப்படுகின்றமையை அவதானிக்க முடிந்தது.	திணைக்கத்தளதிற்காக ஒதுக்கப்படும் வரையறுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மற்றும் பிரதேச அலுவலகங்களின் உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் கட்டிடங்களில் உள்ள வரையறை அற்ற மோசடிகளை தவிர்ப்பதற்கு நிதி ஒதுக்கும் போது கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டியமையால் அத்தியாவசியமான பழுதுபார்த்தல்கள் மாத்திரம் இந்த இல்லங்களிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.	உத்தியோகபூர்வ இல்லங்களை உரிய முறையில் பராமரித்து அதில் குடியமர்த்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

4.5 நட்டங்கள் மற்றும் இழப்புகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
காணிகளை அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனத்தினால் கடல் மணலை நிலத்திற்கு அகற்றும் உடன்படிக்கையொன்று 2018 ஜனவரி 16 ஆந் திகதி வெளிநாட்டு கம்பனியொன்றுடன் கைச்சாத்திட்டிருந்தது. அதற்கமைய 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ரூபா 6,778.04 மில்லியன் பெறுமதிக்கு கடல் மணல் விற்பனை செய்யப்பட்டு கூட்டுத்தாபனத்தினால் வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. எனினும், 1957 அரச உடமையாக்கப்பட்ட காணிகள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 08 ஆம் தொகுதியின் 58 முதல் 67 வரையான பிரிவுககளுக்கு இணங்க கடல் படுக்கையில் ஏதேனும் பொருள் கண்டெடுக்கப்பட்டால் காணிகள் ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் அது மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதற்கான கட்டணம் ஒன்று அறவிடப்பட வேண்டும். எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும்	அரசாங்கத்தின் அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 60 முதல் 63 ஆம் பிரிவுகளின் பிரகாரம் கடல் படுக்கைக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான அங்கீகாரத்தினை வழங்கும் போது அதிமேதகு ஜனாதிபதி மற்றும் காணிகள் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட வேண்டிய போதிலும் 2019 முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலும் கடல் மணல் அகற்றுவதற்காக காணிகள் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனத்தினால் இந்த திணைக்களத்திடம் இருந்து அங்கீகாரம் கோரியிராததுடன் காணிகளை அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனத்தினால் மேற்படி பணிகளுக்கு எவ்வளவு காணி பயன்படுத்தப்பட்டது என்பது, அகழப்பட்ட கடல் மணல் கியூப்களின் எண்ணிக்கை, ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் காணி அபிவிருத்திச் செய்யும் கூட்டுத்தாபனத்தினால் Rhoad Neilson A/C எனும் பெயருடைய	அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளாது மணல் அகழ்தல் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கும் அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	ரூபா 6,778.04 மில்லியன் பெறுமதியான கடல் மணல் அகற்றும் போது பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரம் அல்லது ஏதேனும் தொகையை அரசிற்கு அறவிடப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. அதற்கமைய இந்த நடைமுறையின் போது ஆகக் குறைந்தது. ரூபா 271.1 மில்லியனிற்கு அந்நிய இழப்பொன்று அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	வெளிநாட்டு கம்பனியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை தொடர்பில் 2025.05.19 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அந்த கூட்டுத்தாபனத்திடம் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக கட்டண அறவீடு செய்யும் நடைமுறை தொடர்பில் விவசாய, கால்நடை வழங்கல், மற்றும் காணிகள் நீர்ப்பாசண அமைச்சிடமிருந்து 2025.05.19 ஆம் திகதி ஆலோசனை கோரப்பட்டுள்ளது. அதற்கமைய மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.	

4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கிளிநொச்சி மாவட்டத்தினுள் 2019 ஆம் ஆண்டின் போது சாத்திய வள கற்கை ஒன்றினால் உரிய திட்டத்துடன் மற்றும் ஆராய்ச்சி செய்யாது திணைக்களத்திற்கு உரித்து கையளிக்கப்படுவதற்கு முன்னர் 30 பேர்ச் பரப்பளவான காணி சுற்றுலா விடுதிக்கு பெற்றுக்கொள்ளப்பட்டு அந்த கட்டிடத்தின் ஒரு பகுதி மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக இந்த கட்டிடத்தின் கட்டுமாணங்களுக்கு செலவிடப்பட்டுள்ள தொகை ரூபா 10.42 மில்லியன் ஆன போதிலும் சுற்றுலா விடுதியின் கட்டுமான பணிகள் பூர்த்தி செய்யப்படாது ரூபா 0.32 மில்லியன் தொகையான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டு உரிய முறையில் பயன்படுத்தப்படாது அழிவடைந்தவாறு காணப்பட்டது. இந்த கட்டிடத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்படுவதாக பல அரச நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்துள்ள போதிலும் நிர்மாணிக்கப்பட்டு 05 வருடங்களுக்கு அந்நிய காலமாக எந்த ஒரு பணியிலும் ஈடுபடுத்தப்படாது அழிவடைந்தவாறு காணப்பட்டது.	2025 மார்ச் மாதம் காணிகள் ஆணையாளர் நாயகத்தினால் கிளிநொச்சி சுற்றுலா விடுதிக்கு சென்று இது தொடர்பில் அவதானிப்பு மேற்கொண்டு மாவட்டச் செயலாளருடன் கலந்துரையாடியதுடன் பின்னர் கிளிநொச்சி மாவட்ட செயலாளரினால் மேற்படி சுற்றுலா விடுதி மாவட்ட செயலகத்திற்கு கையளிக்குமாறு கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைய கிளிநொச்சி மாவட்ட செயலாளருக்கு உரித்தினை கையளிப்பதற்கு மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.	கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	உருமய உரித்துறுதிகளை பகிர்ந்தளிக்கும் தேசிய செயற்திட்டத்திற்காக குடியிருப்பு உத்தியோகத்தர்களுக்கு மற்றும் காணிகள் உத்தியோகத்தர்களுக்கு ரூபா	உரிமய நிகழ்ச்சித்திட்டத்தினை துரிதமாக குடியிருப்பு உத்தியோகத்தர்கள் / காணிகள் உத்தியோகத்தர்களுக்கு 2024.04.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம்	கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட

1.19 மில்லியன் தொகையான எரிபொருள் உரித்தற்ற உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கான முறையான அங்கீகாரம் காணப்படாததுடன் சட்டரீதியான ஏற்பாடும் காணப்படவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	திகதி வரையான காலத்திற்கு போக்குவரத்து பணிகளுக்காக மாதம் ஒன்றிறற்கு ரூபா 2000 படியாக எரிபொருள் படிகள் வழங்குவதற்கு சனாதிபதி செயலாளரின் PS/FIN/FD/Rqt/05/02(iv) ஆம் இலக்கமுடைய மற்றும் 2024.07.11 ஆம் திகதிய கடிதத்தில் உரிய ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.	வேண்டும்

4.7 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அநுராதபுரம் கிழக்கு நுவரகம பிரதேச சபையின் அதிகார பிரதேசத்தில் வணிக ரீதியான அடிப்படையில் நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணி கோவைகளிடையே 2021 பெப்ரவரி 01 ஆம் திகதிய 2020/06(1) சுற்றறிக்கையின் பிரகாரம் இரண்டாவது குத்தகை காலம் ஆரம்பிக்கப்பட்டு, நீண்ட கால வணிக ரீதியான குத்தகை கோவைகள் 82 காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் மேற்படி சுற்றறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய அமப/20/1622/322/004 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இரண்டாவது குத்தகை காலம் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கு நிருபிக்கப்படும் திகதி முதல் அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்ட 2020 நவம்பர் 16 ஆந் திகதி வரையிலும் இரண்டாவது குத்தகை காலத்திற்கு உரியதாக எடுக்கப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் குத்தகை தொகையை சரியாக கணிப்பிட்டு அறவிடப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக காணிகள் ஆணையாளர் நாயகத்தின் 2022 நவம்பர் 10 ஆந் திகதிய 4/10/பொது/குத்தகை நிவாரணம் (L2) கடிதத்தின் பிரகாரம் 08 குத்தகை கோவைகள் தொடர்பில் குத்தகை அறவிடப்பட வேண்டிய முறையை குறிப்பிட்டு அனுப்பியிராத காரணத்தால் ரூபா 70.52 மில்லியன் தொகையான குத்தகை தொகை இழக்கப்பட்டிருந்தது. குத்தகை தொகை குத்தகை நிவாரணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த காரணத்தினால் 82 குத்தகை கோவைகளில் 74 குத்தகை கோவைகள் குத்தகையாளர்களால் குத்தகை செலுத்துதல்களை மந்தமாக்கும் அபாயம் ஏற்படக்கூடும் என 2023 ஆம் ஆண்டில்	இது தொடர்பில் 2025.03.25 ஆம் திகதி இடம் பெற்ற கணக்காய்வு முகாமைத்துவ தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சின் செயலாளருக்கு உரிய அங்கீகாரத்திற்காக அனுப்பட்டுள்ளது.	குத்தகை நிவாரணங்கள் தொடர்பில் கருத்திற்கொண்டு அறவிட வேண்டிய நிலுவை குத்தகை தொகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் 2025.04.28 ஆந் திகதி வரையிலும் திருத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	திணைக்களத்திற்குச் சொந்தமான 08 சுற்றுலா விடுதிகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிவாரி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அநுராதபுரம் மற்றும் நுவரெலியா சுற்றுலா விடுதியில் கருத்தில் கொள்ளக் கூடிய அளவிலான நபர்கள் தங்கியிருந்த போதிலும் 06 ஏனைய சுற்றுலா விடுதிகளில் மிகவும் குறைவான எண்ணிக்கையானவர்களே தங்கியிருந்தனர். இந்த சுற்றுலா விடுதிகளை நடாத்திச் செல்வதற்கு மேற்கொள்ள நேர்ந்திருந்த மீண்டெழும் செலவினம் ரூபா 5.22 மில்லியனாக காணப்பட்டதுடன் வருமானம் ரூபா 1.7 மில்லியன் ஆகும். சுற்றுலா விடுதிகள் பழமையானதாக காணப்பட்டமை, பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை, ஒதுக்கீடு செய்வதிலான சிரமங்கள், பாதுகாப்பு குறைவாக காணப்படுகின்றமை, பதவியணி வெற்றிடங்கள் மற்றும் கட்டண அறவீடுகளில் நிலவும் முரண்பாடுகள் சுற்றுலா விடுதிகளை பராமரித்துச் செல்லும் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.	08 சுற்றுலா விடுதிகளிடையே அநுராதபுரம், பொலன்னறுவை, நுவரெலியா மற்றும் கதிர்காமம் சுற்றுலா விடுதிகளுக்காக உத்தியோகத்தர்களிடமிருந்து வரும் கேள்விக்கு இணங்க கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படுவதுடன் மகியங்கனை, மொனராகலை, அம்பாறை, அம்பாந்தோட்டை சுற்றுலா விடுதிகளுக்கு கடமை அடிப்படையில் பெரும்பாலான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. வருடாந்தம் இந்த பழுதுபார்த்த ரூபா 10 மில்லியன் மற்றும் காணிகள் மற்றும் காணிகள் அபிவிருத்தியின் கீழ் மதில்கள்/வேலிகள்/வாயிற் தடுப்புகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 0.1 மில்லியன் அளவான நிதி ஒதுக்கீடுகள் அந்த நிதி ஏற்பாடானது இந்த திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தினாலேயே மேற்கொள்ளப்படுவதுடன் ரத்மலானை உத்தியோகபூர்வ இல்லம், யல்தர உத்தியோகபூர்வ மற்றும் மாகாணங்களுக்கு இடையேயான அலுவலகங்கள் மற்றும் அதற்குரிய சுற்றுலா விடுதிகள், உத்தியோகபூர்வ இல்லங்கள், 402 கட்டிடங்கள் ஆகியவற்றுக்கு உரியதாகும். அதனால் அவற்றின் அத்தியவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னுரிமை வழங்கி பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சுற்றுலா விடுதியின் கட்டிடங்களை திருத்துவதற்கு விவசாய, காணிகள், கால்நடை வழங்கல் மற்றும் நீர்ப்பாசண அமைச்சின் செயலாளரால் நிதி அமைச்சிற்கு எனது LCGD/AD/19/சங்.பங்.கட்டண திருத்தங்கள்/2025 மற்றும் 2025.05.02 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	சுற்றுலா விடுதிகள் தொடர்பில் உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறையை தயாரிக்க வேண்டியதுடன் பழுதுபார்த்தல் பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(இ)	1996 ஒக்தோபர் 31 ஆம் திகதி 182 ஏக்கர்கள் பரப்பளவான காணி உரிய கம்பனி ஒன்றிற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு லங்வா உருக்கு கூட்டுத்தாபனத்திற்கு அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் 15 இற்கு கொரிய கம்பனியொன்றுக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த வெளிநாட்டு கம்பனி உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படாத காரணத்தால் அந்த காணி உள்நாட்டு கம்பனியொன்றுக்கு சுவீகரிக்கப்பட்டிருந்தது. அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6(1) பிரிவின் பிரகாரம் காணியொன்றை வெளிவாரி தரப்பினருக்கு விடுவிப்பதற்கு உரியதாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகளை பின்பற்றாது வெளிநாட்டு கம்பனி ஒன்றிற்கு இந்தக் காணி வழங்கப்பட்டடிருந்தது. 2022 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் வழங்கல் பத்திரத்தின் மூலம் காணியை ஒப்படைப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிராமை, சட்டமா அதிபரினால் வழங்கப்பட்ட அறிவுரையின் பிரகாரம் நிபந்தனைகளை உள்ளடக்கி கைத்தொழில் சாலைகயை இயக்கும் வகையில் காணிகளின் அளவானது வழங்கப்படுதல் மிகவும் பொருத்தமானது என உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தொழிற்சாலைகளின் பணிகளில் செயன் முன்னேற்றத்தை காணக்கூடியதாக இல்லாதிருந்ததுடன் ஆரம்ப உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படு நிலைமையில் இல்லாதிருந்த இந்த காணிகளை மீள சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே தற்போது தொழிற்சாலைக்காக பயன்பாட்டுக்கு எடுக்கப்படாத காணியில் விளையாட்டுத் திடலொன்று மற்றும் சேதமடைந்தவாறு காணப்படும் உத்தியோகபூர்வ இல்லங்கள் காணப்படுவதுடன், அவ்வாறு குறைப்பயன்பாட்டுடன் காணப்படும் 160 ஏக்கர் அளவான காணி தொடர்பிலும் காணிகள் அமைச்சினால் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1961 ஆம் ஆண்டு இலங்கை உருக்கு கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டுள்ளதுடன் பின்னர் இந்த காணிகள் உருக்கு கூட்டுத்தாபனத்திற்கு சுவீகரிக்கப்பட்டு 44 ஆம் பிரிவின் கீழ் ஒப்படைப்பு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. 1996 ஆம் ஆண்டில் அரச கம்பனிகளை தனியார் மயப்படுத்தலின் கீழ் உருக்கு கம்பனியின் கீழ் 90 சதவீத பங்குகள் கொரிய கம்பனி ஒன்றிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டின் போது அந்தக் கம்பனிக்குச் சொந்தமான பங்குகள் உள்நாட்டு நிறுவனமொன்றினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. 1987 இன் 23 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் தனியார் மயப்படுத்தப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமாக காணப்பட்ட அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் நியதிச்சட்ட உறுப்புக்களில் காணப்பட்ட பெறுமதி செலுத்தப்பட்டிருப்பின் அந்தக் காணிகளின் உரித்தினை வழங்கல் பத்திரம் மூலம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதாக அந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய இந்தக் காணிகளை தொடர்பில் குழுவொன்று நியமிக்கப்பட்டு அந்த குழுவின் பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையொன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக் குறிப்பிடப்படுள்ளது. மேலும் பிரச்சினைக்குரிய காணிகளின் பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு மற்றும் மதிப்பீடு தொடர்பில் பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து கிடைக்கப் பெற்ற விசாரணைகளின் பிரகாரம் முதலீட்டாளரால் 90 சதவீத பங்குகளுக்கு ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் 15 ஆன தொகை செலுத்தப்பட்டுள்ளதாக மற்றும் சொத்துக்கள் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்படாது ஒட்டுமொத்த நிறுவனங்களுக்கான மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் சட்டமா அதிபரால் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை மற்றும் கொள்வனவு உடன்படிக்கைகளின் மூலம் முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதை மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.	காணிகளை ஒப்படைத்தல் இதுவரை இடம் பெற்றிராததால் விரிவான பரிசோதனையின் பின்னர் குறித்த காணிகள் வழங்கப்பட வேண்டும்

(ஈ)	1982 காணி சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 38(அ) பிரிவின் பிரகாரம் சுவீகரிக்கப்பட்ட கடுவலை பிரதேச செயலகப் பிரிவின் 492/D ரஜமல் வத்த கிராம உத்தியோகத்தர் பிரிவின் மு.இ.9302 வரைபடத்தின் 02 இலக்க காணித் துண்டு 0.0506 ஹெக்ரயர்கள் அல்லது 20 பேர்ச் பரப்பளவான காணி தனியார் தரப்பினருக்கு தங்கும் அடிப்படையில் 30 வருடங்களுக்கு வருடாந்தம் 0.8 மில்லியன் தொகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2025 பெப்ரவரி 20 ஆந் திகதி வரையிலும் குறித்த நபர் இந்தக் காணியில் குடியேறி இருக்கவில்லை. என்பது அவதானிக்கப்பட்டது. வணிக நகர் ஒன்றான பத்தரமுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த காணியை அரச தேவைப்பாட்டிற்கு சுவீகரித்து வெளிவாரி தரப்பினருக்கு தங்கும் அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் அரசின் தேவைப்பாடு இல்லாது இருப்பின் வணிக பெறுமதியுடனான இந்தக் காணியை வருடாந்த மதிப்பீட்டு பெறுமதியின் 4 சதவீதத்தின் கீழ் குத்தகைக்கு வழங்கும் இயலுமை காணப்பட்ட போதிலும் இந்த செயற்பாடு காரணமாக அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளது.	இந்தக் காணித்துண்டு நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் காணிகளை சுவீகரிக்கும் சட்டத்தின் 38(அ) பிரிவின் கீழ் 1982 இல் அரசிற்கு சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன் 1997 ஆம் ஆண்டின் போது விவசாய, காணிகள் மற்றும் வன வளங்கள் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டில் அந்தக் காணிகள் விவசாய, காணிகள் மற்றும் வன வளங்கள் அமைச்சின் கீழ் அபிவிருத்தி பணிகளுக்கு பயன்படுத்தப்படாத காரணத்தால் நீண்ட கால குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல் தொடர்பில் எதிர்ப்பொன்று காணப்படவில்லை என முன்னால் காணியின் ஒரு பகுதிக்கு உரித்து காணப்பட்ட விவசாய அமைச்சின் செயலாளரால் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய மாகாண அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் பரிந்துரைக்கப்பட்ட அறிக்கைகளை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இந்தக் காணிக்காக 2012.07.26 ஆம் திகதி நீண்டகால குத்தகை அங்கீகாரம் கிடைத்துள்ளது. அரச காணியை நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கும் போது ஏலம், விலைக்கு கேள்வி போன்ற போட்டி நடைமுறைகள் அல்லது காணிகள் கச்சேரி போன்ற நடைமுறை பின்பற்றப்பட்டு குத்தகையாளர்களை தெரிவு செய்வதற்காக அரச காணிகள் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறான போதிலும் மேல் மாகாண அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் இந்தக் காணிகளை அகற்றுவதற்காக அமைச்சரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கமைய 2019.02.03 ஆம் திகதிய 4/10/35274 ஆம் இலக்க குத்தகை உரித்துறுதியின் மூலம் இந்தக் காணி வழங்கப்பட்டுள்ளது. குறித்த பிரச்சினைக்குரிய காணி துண்டுகளை மீள சுவீகரித்து அரசாங்கத்திற்கு நலன் ஏற்படும் விதத்தில் செயற்பட வேண்டும் என 2025.03.14 ஆம் திகதி கணக்காய்வு ஐய வினாவின் மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளமையால் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய விதம் தொடர்பில் 2025.05.21 ஆம் திகதிய விவசாய, கால்நடை	உரிய முறையில் காணிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

		வழங்கல், காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சிடம் இருந்து அறிவுரை கோரப்பட்டுள்ளது.	
(உ)	உருமய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திறந்த வழங்கல் பத்திரங்களை வழங்குவதற்காக பிரதேச செயலாளர்களினால் அங்கீகரிக்கப்பட்ட E-Slims கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 63,818 ஆன போதிலும் அதற்காக "O" ரேகை சித்திரங்கள் 38,396 வழங்கப்பட்டிருந்த போதிலும் வழங்கல் பத்திரங்கல் தயாரித்து நிறைவு செய்யப்பட்டுள்ள எண்ணிக்கையானது 12,468 அல்லது 19 சதவீதம் ஆகும். அதற்கமைய உருமய நிகழ்ச்சித்திட்டம் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட திறந்த வழங்கல் பத்திரங்களின் எண்ணிக்கை 22,362 மாத்திரம் ஆகும்.		
i.	திணைக்களத்தின் நிரந்தர கடமைகளை நிறைவேற்றும் உத்தியோகத்தர்கள் நிரந்தர கடமைகளிலிருந்து அகற்றப்பட்டு உருமய நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2023 ஜுலை 16 ஆந் திகதி முதல் மீள அறிவிக்கப்படும் வரை 07 கண்காணிப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் 60 விடயப்பொறுப்பு உத்தியோகத்தர்கள் நிகழ்ச்சித்திட்டத்திற்காக கடமைகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு தயாரிக்கப்பட்டிருந்த வழங்கல் பத்திரங்கள் நாடு முழுவதும் பகிர்ந்தளித்தல் மேற்கொள்ளப்பட்டு அதற்கான வாகனங்களுக்காக எரிபொருள் செலவினங்களாக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 12.1 மில்லியன் ஆகும்.	நிலவிய அரச கொள்கைகளை நடைமுறைப்பத்துவதற்கு செலவின தலைப்பின் கீழ் அரச நிதியேற்பாடுகளை ஒதுக்கும் அடிப்படையில் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
ii.	வழங்கல் பத்திரத்தினை அச்சிடுவதற்கு Conquer Paper 40,000 அளவானது ரூபா 3.5 மில்லியன் செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டு இந்த கடதாசி இருப்பில் ரூபா 1.05 மில்லியன் பெறுமதியான 24 பக்கற்றுக்கள் 2025 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் இரு இடங்களில் விளைவற்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.	உருமய நிகழ்ச்சித்திட்டம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ள போதிலும் இது தொடர்பில் குழுவின் தீர்மானம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த தீர்மானத்தின் பிரகாரம் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அல்லாது விடின் இந்த கடதாசிகள் பதிவாளர் நாயகத்தினால் திணைக்களத்திற்கு அல்லது வேறு பொருத்தமான நிறுவனம் ஒன்றிற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.	தேவைப்பாட்டினை மதிப்பீடு செய்து கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும்

iii.	உருமய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 32.64 மில்லியன் பெறுமதியான 36 கணினிகள் அபிவிருத்திப் பிரிவிற்கு கிடைத்திருந்ததுடன் அது மிகையாக காணப்பட்டமையால் 12 கணினிகள் மீள களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா 5.95 மில்லியன் செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட 15 மடிக் கணிணிகள் இந்த பிரிவிற்கு கிடைக்கப்பெற்று அவை மீண்டும் களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்த பிரிவிற்கு அச்சுப் பிரதி இயந்திரங்கள் 03 காணப்படும் போது மேலும் 09 அச்சுப்பிரதி இயந்திரங்கள் உருமய நிகழ்ச்சித்திட்டத்தை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்தது. 2025 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் உருமய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாமையால் இந்தப் பிரிவிற்கு சொந்தமாக 10 அச்சுப்பிரதி இயந்திரங்கள் விளைவற்று காணப்படும் நிலை அவதானிக்கப்பட்டது. இந்த இயந்திரங்கள் 2024 மே 16 ஆந் திகதி ரூபா 4.13 மில்லியன் செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.	திணைக்களத்தின் கணினி தேவைப்பாட்டிற்காக வழங்கப்பட்ட வழங்குவதற்கு இயலுமான வரையில் உரிமய நிகழ்ச்சித்திட்டத்திற்காக மிகைக் கணிணிகள் (தற்போது உருமய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தால்) களஞ்சியத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது.	தேவை மதிப்பிடப்பட்டு கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஊ)	பொதுவான கடமைகளாக நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை துரிதமாக நிறைவேற்றுவதற்கு நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஓய்வு பெற்ற 08 நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்கள் 2024 மே மாதம் முதல் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு ரூபா 3.56 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. திறைசேரியினால் வெளியிடப்பட்ட தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2024 இன் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் இணைத்துக் கொள்ளப்படக் கூடிய போதிலும் இந்த உத்தியோகத்தர்களை துரிதமாக தயாரிக்கும் செயற்பாட்டிற்கு தொடர்புபடுத்தி நடமாடும் சேவையை நடாத்துவதற்கு, அரசின் விழாக்கலாக உரித்து வழங்கல் மேற்கொள்வதற்கும் அதற்காக சனாதிபதி உள்ளடங்கலாக அமைச்சர்களை பங்குபற்றும் பணிகள் இந்த உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக தற்காலிக அடிப்படையில் பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் 11 மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டு 2024 மே மாதம் முதல் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நாள் ஒன்றுக்கு	உருமய நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு ஓய்வு பெற்ற நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துதல் சனாதிபதி செயலாளரின் PS/PSB/SAS-4/Req/2024/1 மற்றும் 2024.04.05 ஆம் திகதிய அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2024.05.27 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் தொழில்நுட்ப கல்லூரியின் மாணவர்கள் தற்காலிகமாக இந்த நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இணைத்துக் கொள்ளப்படக்கூடிய போதும் செயலாளரின் PS/FIN/FD/Rpt/05/02(vi) இலக்க மற்றும் 2024.08.20 ஆம் திகதிய ஆலோசனைகளை அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	தேவைப்பாடு மற்றும் உரிய அங்கீகாரங்களின் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு உத்தேச பணி செயலாற்றலை அடைய வேண்டும்.

சேவையாற்றுவதற்கு ரூபா 1,500 படியாக அந்த மாணவர்களுக்கு ரூபா 1.62 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

5. மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை

பதவிகள்	அங். பதவியணி	உள். பதவியணி	ஒப்பந்த அடிப்படை	வெற்றிடங்கள்
சிரேஷ்ட	95	36	-	59
மூன்றாம்	38	05	-	33
இரண்டாம்	710	458	09	252
ஆரம்ப	121	92	-	29
மொத்தம்	964	591	09	373

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	உதவிக் காணிகள் ஆணையாளர் / பிரதி காணிகள் ஆணையாளர் ஆகிய பதவிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 26 ஆக காணப்பட்ட போதிலும் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் 05 உத்தியோகத்தர்கள் மாத்திரம் பதிலீட்டாளர்கள் இல்லாது இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்த காரணத்தினால் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் அந்த பதவியணிகளின் வெற்றிடங்களில் எண்ணிக்கை 13 ஆக காணப்பட்டது.	ஏற்றுக்கொள்கின்றேன். சனாதிபதி செயலாளர் செயலகத்தினால் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் வகையில் குறித்த உத்தியோகத்தர்களை விடுவிக்குமாறு கட்டளை இடப்பட்டுள்ளமையால் உத்தியோகத்தர்கள் நீண்டகாலமாக ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றுதல், நிலவும் தனிப்பட்ட தேவைப்பாடுகள் நியாயமான விடயங்களை கருத்திற் கொண்டு இடமாற்றங்களை வழங்குதல் இடம் பெற்றுள்ளது.	இடமாற்றங்களை வழங்கும் போது நிலவும் வெற்றிடங்கள் தொடர்பில் கற்கை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும்
(ஆ)	திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான முறையே 33 மற்றும் 74 ஆக காணப்பட்டதுடன் 2023 மற்றும் 2024 ஆம் ஆணடுகளில் அந்த பதவிகள் முறையே 18 மற்றும் 17 இற்காக பதிலீட்டாளர்கள் இல்லாது / பதிலீட்டாளரின் பின்னர் வழங்கும் அடிப்படையில் இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மொழி பெயர்ப்பு உத்தியோகத்தர் மற்றும் தொழில் நுட்ப	தமிழ் மொழி மூல உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களை அல்லது ஆட்சேர்க்குமாறு கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது. வெற்றிடங்கள் நிலவும் இ.நி.சேவையின் I/II/III தரத்தின் பதவிகள் மற்றும் இ.க.சேவையின் II/III தரத்தின் பதவிகளை பூர்த்தி செய்து தருமாறு 2024 ஆம் ஆண்டு தொடர்ச்சியாக பொது நிருவாக மாகாண	தேவைப்பாட்டின் பிரகாரம் வெற்றிடங்களை பூர்த்தி செய்ய வேண்டும்.

	உத்தியோகத்தர் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள் 03 இற்கு ஆகியவற்றுக்கான வெற்றிடங்கள் பதவி ஏற்படுத்தப்பட்ட நாள்முதல் காணப்படுவதாக கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.	சபைகள் மற்றும் உள்ளூராட்சி சேவைகளினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப பதவியொன்று மற்றும் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில் நுட்ப உதவி உத்தியோகத்தர் பதவிகள் 05 இற்காக வெற்றிடங்கள் பதவி ஏற்படுத்தப்பட்ட நாளிலிருந்து நிலவுகின்றது. அந்த வெற்றிடங்களை பூர்த்தி செய்து தருமாறு கோரிக்கை மேற்கொள்ளபட்டுள்ளதுடன் அவற்றின் 02 வெற்றிடங்கள் பூர்த்தி செய்ய இயலுமானதாக உள்ளது. வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல்வேறு சந்தர்ப்பங்கள் அங்கீகாரங்களில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய நிறுவனங்களிடம் இருந்து கோரிக்கை விடுக்கப்பட்டு அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு உரிய அங்கீகாரங்கள் கிடைத்திராமையால் வெற்றிடமான பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள முடியாதிருந்தது.
(இ)	தற்போது அரச காணிகளில் பல்வேறு காரணங்களின் அடிப்படையிவ் உரித்து விலகல்கள் காணக்கூடியதாக உள்ளமையால், திணைக்களத்தில் நிலவும் பணிகள் தொடர்பில் மீளாய்வு மேற்கொண்டு அதற்கமைய திணைக்களத்திற்கு அவசியமான பதவியணி தொடர்பில் மீள திருத்தப்பட்டு அந்த அங்கீகாரத்தினை அடிப்படையாக கொண்டு பதவியணியை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	